# தவக்காலம் 2ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

“என் அன்பார்ந்த மகன் இவரே, இவருக்குச் செவிசாயுங்கள்” என்ற பரம தந்தையின் வார்த்தையை இதயத்திற்குள் ஏற்று, இயேசு உருமாற்றம் பெற்று, உலகை மீட்க முன்னறிவிக்கப்பட்டது போல் நாமும் உள்ள மாற்றம் பெற்று உலகை அன்பால் நிரப்பிட இன்றைய தவக்காலம் 2ஆம் ஞாயிறு திருப்பலி அன்புடனே அழைக்கப்பட்டிருக்கிறோம்.

மனிதரிடையே பிறந்து மனிதராய் வளர்ந்த இறை மைந்தனின் உருமாற்றம் சீடர்களுக்கு இறை நம்பிக்கையை ஆழப்படுத்தியது. இறை பாதையின் கடினத் தன்மையை உணர்த்தியது. பயணிக்க ஏதுவான புத்துணர்ச்சியைத் தந்தது. நாமும் இத்தகைய அனுபவத்தை வேண்டுவோம்.

ஆபிரகாமுக்கு இறைவன் கொடுத்த கட்டளையையும், பணிந்த ஆபிரகாமுக்கு இறைவன் அளித்த ஆசீரையும் இன்றைய முதல் வாசகம் எடுத்துரைக்கிறது. விசுவாசத்தின் தந்தையாக ஆபிரகாம் உயரக் காரணமான இறைவனின் பரிட்சையை நாம் காண்கிறோம்.

முதிர் வயதில் கிடைத்த மகனல்லவா

என ஆபிரகாம் ஐயப்பட்டிருந்தால்

மாதவிடாய் நின்ற மலடியான என்

மடியில் உதித்த இரத்தினமல்லவா என

சாரா சற்று யோசித்திருந்தால்

வானத்து விண்மீன்களைப் போல்

உன்னைப் பெருகச் செய்வேன் என்ற ஆசியை

ஆபிரகாம் பெற்றிருப்பாரா?

தளர்வுக்கு இடம் கொடாமல்

இறை விருப்புக்கு மனம் கொடுப்போம்.

இன்றைய இரண்டாம் வாசகத்தில், கடவுள் நம் சார்பில் இருக்கும் போது நமக்கு எதிராய் இருப்பவர் யார் என்று இறைவனை இறுக்கமாய்ப் பற்றிக் கொள்ள அழைக்கிறார் புனித பவுல்.

கிறிஸ்துவுக்காக இறப்பின் அது தனக்கு ஆதாயமே என்றவர் பவுல். நாமும் இறைவன் விரும்பும் செயல்களில் சிந்தையைச் செலுத்துவோம். நம்மை மீட்க மகனையே தந்த தந்தையை மகிமைப்படுத்துவோம்.

இன்றைய நற்செய்தியில், “என் அன்பார்ந்த மகன் இவரே! இவருக்குச் செவிசாயுங்கள்” என்ற பரம தந்தையின் அழைப்புக்கு செவிசாய்க்கவே அழைக்கப்பட்டிருக்கிறோம். இறைவன் இவ்வுலகில் விட்டுச் சென்ற காரியங்களைத் தொடர்வோம்.

பசி சாத்தானின் தொழிற்சாலை அது

பாவங்களை உற்பத்தி செய்கிறது.

பசி வந்திட்டால் புத்தன் கூட

கொலைகாரன் ஆகலாம்.

எனவே இத்தவக்காலத்தில் பசியால் வாடுவோரின் பசியமர்த்துவோம். துன்பத்தில் உழல்வோருக்கு துணை நிற்போம். தானத்தாலும் தவத்தாலும் கரத்தை தூய்மையாக்குவோம். இச்சிந்தனைகளை மனதில் தாங்கி மீட்பின் பலியில் இணைவோம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. “என் அன்பார்ந்த மகன் இவரே! இவருக்குச் செவிசாயுங்கள்” என்றவரே எம் இறைவா!

எம் தாயாம் திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், பணியாளர்கள் அழைப்பிற்கேற்ற எளிய வாழ்வு வாழவும், இறைவனின் குரலை உணர்ந்து, உள்ளத்தின் நிறைவோடு மக்களுக்கு நற்செய்திப் பணியை வாழ்வாக்கிட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. ஆபிரகாமை ஆசீர்வதித்தவரே எம் இறைவா!

எம் இந்திய நாட்டை ஆட்சி செய்யும் ஆட்சியாளர்கள், அரசு அதிகாரிகள் நாட்டைச் சீரழிக்கும் போக்கைக் கைவிட்டு சீர்படுத்தும் வழியில் ஆட்சி மேற்கொள்ளவும், நாட்டின் வறுமை நிலையை மாற்றி வளப்படுத்த முயற்சி எடுக்கத் தேவையான நல்லறிவைத் தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. நல் வழியில் வாழ அழைப்பவரே எம் இறைவா!

தவக்காலத்தை அனுசரிக்கும் நாங்கள் தானம், தவம் இரண்டினையும் மேற்கொள்ளவும், பசி, வேதனை, நோய்களில் வாடுவோரைக் கண்டு எங்கள் மனமுவந்து உதவி புரியும் மனம் தந்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. ஆபிரகாமை ஆசீர்வதித்தவரே எம் இறைவா!

எம் பகுதியை ஆசீர்வதித்து, தேவையான கால சூழலைத் தந்து வேளாண்மை ஏற்றம் பெறவும், குடும்பங்களில் அமைதி, சந்தோசம் நிறைவாகவும், படிக்கும் மாணவர்களின் எதிர்காலம் சிறக்கவும், இதயத்தின் வேண்டுதல்கள் நிறைவேறவும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com